| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்<br>மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

**ந.க.எண். 016388 /H1/2024** **நாள்: 15.02.2024**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மார்ச் – 2024, மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுக்களை (Hall Ticket) பதிவிறக்கம் செய்தல் – அறிவுரைகள் – சார்பு.

—————

நடைபெறவுள்ள மார்ச் – 2024 மேல்நிலை பொதுத் தேர்விற்கு, பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளி மாணவர்களது தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுக்களை (Hall Tickets), மேல்நிலை இரண்டாமாண்டிற்கு **20.02.2024 அன்று பிற்பகல் முதலும்,** மேல்நிலை முதலாமாண்டிற்கு **21.02.2024 அன்று பிற்பகல் முதலும்,** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று "online-portal" என்ற வாசகத்தினை "Click" செய்து "**HIGHER SECONDARY FIRST YEAR / SECOND YEAR EXAM MARCH - 2024**" எனத் தோன்றும் பக்கத்தில், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID, Password-ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இது குறித்த விவரத்தினை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுகளை மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் தவறாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளவேண்டும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்று ம் தனியார் பள்ளிகள்).